முட்களுடன் முட்களில்லாமல்
CITIZEN சிற்றிசன்
கைக்கடிகாரங்கள்
சுவர், மேசை
மணிக்கூடுகள்
தாராளமாகக் கிடைக்கும்
நேரடிஇறக்குமதியாளர்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 புரட்டாதி 17 ஷவ்வா: 29 இதழ்: 234
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 3-10-78

TOSHIBA ரொஷிபா
குளிர்சாதனப்
பெட்டி
மேசை விசிறிகள்
தாராளமாகக் கிடைக்கும்
நேரடிஇறக்குமதியாளர்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

# எஸ். ஜே. வியை தோற்கடிக்க

# 48 தமிழ்இளைஞர் விடுதலை செய்யப்பட்டனர்

## பீலிக்ஸின் உத்தரவு பற்றி ஏ.எஸ்.பி. சில்வா சாட்சியம்

### 'இதுஎனது மாபெரும் அரசியல் சூதாட்டம்' என்று முன்னாள் நீதி மந்திரி கருதினார்''

(கொழும்பு)

''கொலை, ஆயுதமுனையில் கொள்ளை, கைக்குண்டு தயாரித்தல் - வீசுதல் போன்ற பயங்கர குற்றங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 48 தமிழ் இளைஞர்களை, காங்கேசன்துறை இடைத்தேர்தலுக்கு முன்னதாக விடுதலை செய்யவேண்டும் என்று முன்னாள் நீதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா திடசங்கற்பம் பூண்டிருந்தார். திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் நிர்ப்பந்தம் மீது, - இந்தஉத்தரவு மீது 48பயங்கர குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர். இதன்பின்னர் வடபகுதியில் இரத்தக்களறி ஏற்பட்டது''

இவ்வாறு, விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்த சி. ஐ. டி. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. பி. வி. டபிள்யூ. டி. சில்வா கூறினார்.

''பயங்கர குற்றம் புரிந்த 48 தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்வது பற்றி திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா கருத்து தெரிவிக்கையில், ''இது எனது சொந்தத் திட்டம், எனது மாபெரும் அரசியல் சூதாட்டம் இது'' என்று வர்ணித்தார்'' என்றும் திரு. பி. வி. டபிள்யூ. டி சில்வா தமது சாட்சியத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. சில்வாவும், சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் திரு. எச். வை. டி. சில்வாவும் சாட்சியமளிக்கையில், முன்னாள் நீதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் அதிகார துஷ்பிரயோகம் பற்றி விளக்கிக் கூறினர்.

#### தமிழ் இளைஞர்கள் விடுதலை

'வடபகுதியில் பயங்கர குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 48 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களை விடுதலை செய்வதில் முன்னாள் நீதி அமைச்சர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். தேசிய பாதுகாப்பு சபையின் இரண்டு கூட்டங்களில் நான் கலந்து கொண்டேன். ஒரு கூட்டத்துக்கு முன்னாள் பிரதமரும் மற்றைய கூட்டதுக்கு திரு பீலிக்ஸும் தலைமை வகித்தனர். இக்கூட்டத்தில் 48 தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்ய வேண்டுமென்று திரு. பீலிக்ஸ் வற்புறுத்தினார்'' என்று ஏ, எஸ். பி. திரு. சில்வா தெரிவித்தார்.

#### எஸ். ஜே. வியை தோற்கடிக்க

''காங்கேசன்துறை இடைத்தேர்தலுக்கு முன்னர் இவர்களை விடுவித்தால், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆதரவாளர்களாகமாறி, காங்கேசன்துறை தொகுதி அபேட்சகர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு எதிராக வேலைசெய்வார்கள். இவர்கள் மூலம் திரு. எஸ். ஜே. வி.யை தோற்கடிக்கமுடியும்'' என்று திரு. பீலிக்ஸ்

(6ம் பக்கம் பார்க்க)

## பிஎம்சி - 5ரொன் லொறி

எம்மால் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பி எம் சி 5 ரொன் லொறி எமது ஸ்தாபனத்திற்கு முன்பாகப் பார்வைக்கு விடப்பட்டிருக்குமென்பதை அறியத் தருகின்றோம்.

விபரங்கட்கு எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

துரை

ஆர். ஜி. பில்டிங்ஸ் - 66, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 0481

## மதுவிலக்கை மீறினால் ஆயுள்தண்டனை!

### தமிழகத்தில் அதிதீவிர சட்டங்கள்

சென்னை, அக். 2

மதுவிலக்கை தமிழ் நாட்டில் அதி தீவிரமாக அமுல் செய்ய, காந்தி ஜயந்தி தினமான இன்று, அவசரச் சட்டமொன்று கொண்டு [illegible] மாநில கவர்னரால் பிறப்பிக்கப்பட்ட இச்சட்டம், நாளை 3-ம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது. இப்புதிய சட்டப்படி-

'பர்மிட்' இல்லாமல் எவரேனும் மது அருந்தினால் [முதன் முறையாக விருந்தால] மூன்றுமாதகால சிறைத் தண்டனை கிடைக்கும். அவர் அரசு ஊழியராகவிருந்தால் ஆறுமாத சிறைத் தண்டனை கிடைக்கும். மீண்டும் இழைத்தால் கடும் தண்டனை கிடைக்கும். கள்ளச் சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், இதனைத் தயாரிக்க உதவி செய்தல் போன்ற குற்றங்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும்! இதனுடன் மதுவிலக்கை மீறுவோருக்கு கடுமையான தண்டனை வழங்கவும் புதிய சட்டம் வகைசெய்கிறது.

நேற்று வரையிருந்த பழைய சட்டப்படி, மதுவிலக்கை மீறுவோர், அபராதம் செலுத்தி விட்டால் போதுமானது!

## பொற்தொழிலாளருக்கு பவுண் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

பதிவு செய்யப்பட்ட பொற் தொழிலாளருக்கு பர்மிட்டுக்கு தங்கப்பவுண் விநியோகம் நேற்று ஆரம்பமானது.

நல்லூர் அரசினர் நெசவு பயிற்சி நிலையத்தில், யாழ். மாவட்ட சிறுகைத் தொழில் இலாகாவினால் இப்பவுண் விநியோகம் நடைபெற்று

(6-ம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்த தொழிலாளர்கள் மீது அனுதாபம்காட்ட முடியாது

### கருத்தரங்கில் ஜனாதிபதி

[கொழும்பு]

'நாட்டைக் கட்டி எழுப்புவதில் மக்கள் கடின உழைப்பை மேற்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், வேலைநிறுத்தத்தில் தொழிலாளர்கள் ஈடுபடுவது, தேசத்துரோகமான செயலாகும்' என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று தெரிவித்தார்.

இங்கு நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்;

''நானும் ஒரு தொழிற்சங்கத்தலைவர்தான். தொழிலாளர்கள் நலனில் எனக்கு மிகுந்த அக்கறை உண்டு. ஆனால் வேலைநிறத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்மீது அனுதாபம் காட்டமுடியாது. குளிரூட்டப்பட்ட அறையில் இருந்துகொண்டு ஏழைத் தொழிலாளரை வேலைநிறுத்

(6-ம் பக்கம் பார்க்க)

## நான்கு கொள்ளைக் குற்றச்சாட்டு:

### சந்தேகநபர் அடையாளம் காட்டப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

நான்கு கொள்ளை குற்றச்சாட்டு தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில், சந்தேகநபரான எஸ். சதானந்தசிவம் அடையாளம் காட்டப்படவில்லை.

யாழ்ப்பாணம் பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் யாழ். நீதிமன்றத்தில் நேற்று இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. 6 சாட்சிகளில் எவரும்

(6-ம் பக்கம் பார்க்)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கிணறும் சுற்றுமதிலும் உள்ள அரை ஏக்கர் பரப்பளவு கொண்ட வளவும் வீடும், அநெக்ஸ்உம் கெருடாவிலில் (தொண்டமனாறு) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ஆர். இராமச்சந்திரன், 47, வங்கசாலை வீதி, யாழ்ப்பாணம். 0451

### காணவில்லை

சுமார் 13 வயது மதிக்கத்தக்கவரும், பொதுநிறமுடையவரும், 4'—6'' உயரமுடையவரும், கண் சற்று விகாரமானவருமான கலாமதி கரையாண்டியை கடந்த 29-9-78 முதல் காணவில்லை. இவரைப் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ, அல்லது கீழ்க்காணும் முகவரிக்கோ தகவல் கொடுத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். இல. 7, வெள்ளாந் தெரு, வண்ணார்பண்ணை.

0478

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

அரியாலை புதிய சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடையை 15-10-78 தொடக்கம் 31-12-79 வரை குத்தகைக்கு விடுவதற்கு 12-10-78ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்கள் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 50/-ம் கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 10/-ம் செலுத்துவதன் மேல் 11-10-78ம் திகதி புதன் கிழமை பி. ப. 3-00 மணி வரையும் வழங்கப்படும். மேலதிக விபரங்களை மாநகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க, சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம், யாழ்ப்பாணம்.
29-9-78. 0476

## கருத்தரங்கு

(வண்ணார்பண்ணை)

தமிழர் சுயாட்சிக்கழகத்தின் அரசியல் கருத்தரங்கொன்று இம்மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை ஆனைக்கோட்டையில் நடைபெறவிருக்கிறது. (க)

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் 28, வேம்படி வீதி, கியூபேற் துரைஐயா ஞானசேகரம்

மரணமெய்தியவர்

யாழ்ப்பாணம் 28, வேம்படி வீதி, கியூபேற் துரைஐயா ஞானசேகரம் கைம்பெண் சிந்தியா நவமலர்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் வழக்கு இல. 3404/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1978-ம்ஆண்டுகார்த்திகை மாதம் 3-ந் திகதி முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்.

1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

பி. செ. இராசக்கோன்,
சட்டத்தரணி,
தயாரித்தவர். 0477

## குளத்தில் கிடந்தசடலம் அடையாளம் காணப்பட்டது

(மாவிட்டபுரம்)

அளவெட்டியில் குளமொன்றினுள் கிடக்கக்காணப்பட்ட இன்ந்தெரியாத சடலம், அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டதாக 'ஈடுநாடு' இதழில் வெளியாகிய செய்தியையடுத்து, மானிப்பாய் சுதுமலை வாசி ஒருவரது சடலமே அதுவென அவரது மகன் அடையாளம் கண்டுள்ளார்.

அளவெட்டியில் குளமொன்றினுள் நஞ்சருந்திய நிலையில் கிடந்த சடலம் ஒன்றை சுன்னுகம் பொலிசார் கண்டுபிடித்து தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிசவச்சாலையில்3 தினங்களாக வைத்து, அச்சடலத்தை புகைப்படமும் எடுத்து சகல பொலிஸ் நிலையங்களுக்குப் அனுப்பியிருந்தனர். ஆனல் 3 தினங்களாக எவரும் அடையாளம் காட்டாமையால் இச்சடலம் அரசாங்கசெலவில் அடக்கம் செய்யப்பட்டு இது தொடர்பாக நடந்த மரணவிசாரணையில் போதியதகவல் கிடைக்காமையால் பகிரங்கத் தீர்ப்பும் வழங்கப்பட்டதாக 'ஈழநாடு' இதழில் செய்தி வெளியானது தெரிந்ததே.

இச்செய்தியைக் கண்ணுற்ற மானிப்பாய் சுதுமலையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர், இது குறித்து தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் விசாரித்தபோதுவீட்டிலிருந்து புறப்பட்டு திரும்பிவராமையால் தம்மால் தேடப்பட்ட மானிப்பாய் சுதுமலையைச் சேர்ந்த வயிரமுத்து செல்லத்துரை என்பவரது சடலமே இச்சடலம் என அடையாளம் காட்டினர். சடலத்தின் புகைப்படமும் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. இதையடுத்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. நா.தம்பிராசா விசாரணை நடத்தியபோது காலமானவரின் மகன் செல்லத்துரை மகேந்திரன் சாட்சியமளிக்கையில்,

''எமது குடும்பத்தில் 5 பெண்பிள்ளைகளும், 3 ஆண் பிள்ளைகளும் உள்ளோம். பெண்பிள்ளைகளுக்கு வயது வந்தும் திருமணமாகாமையால் தந்தை மனமுடைந்திருந்தார். அத்துடன் எங்கள் இனத்தவர் ஒருவர் அண்மையில் காலமானதாலும் அவர் கவலையுற்றிருந்தார். வீட்டிலிருந்து புறப்பட்ட அவர், வீடு திரும்பாததால் பல இடங்களிலும் தேடினேம். பின்னர் 'ஈழநாடு' பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு வந்தபோதுதான் அவர் எனது தந்தை எனத் தெரியவந்தது'' என்ருர்.

வைத்திய அதிகாரியின் சாட்சியத்தின்படி அவரது வயிற்றில் நஞ்சு இருந்ததாகவும் அதுவே மரணத்திற்குக் காரணமெனவும்தெரிந்திருந்தமையால் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது

### ஊழியர் சேமலாப நிதி:

## பன்முகப்படுத்தலையடுத்து புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

ஊழியர்சேமலாப நிதிப் பிரிவு பன்முகப்படுத்தப்பட்ட தற்கமைய பெரும்பான்மையான அலுவல்கள் நேற்றுத் தொடக்கம் யாழ்ப்பாணம் தொழில்கந்தோரிலேயே நடைபெற்று வருகின்றன.

கொழும்பில் இதுதொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலை நீங்கி பொதுமக்களுக்கும், ஊழியர்களுக்கும் பெரும்நன்மைகிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இலகுவானமுறையில் காரியங்கள் நடைமுறைப்படுத்தும் நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## "பொம்மைவெளி எதிர்காலத்தில் நவீன நகராகும்" -- யாழ்ப்பாண எம். பி.

(யாழ்ப்பாணம்)

''தீமையிலும் நன்மை உண்டு என்பதுபோன்று அதிர்ஷ்டவசமாக பொம்மைவெளியில் 32 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதால், வீடமைப்புத் திணைக்களம், சுயஉதவி வீடமைப்புத்திட்டத்தின்கீழ், இந்த 32 வீடுகளையும் கட்டித்தர முன்வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது'' என்று பொம்மைவெளியில் நடைபெற்ற சுய உதவி வீடமைப்புத்திட்ட அடிக்கல்நாட்டு வைபவத்தில் யாழ். முஸ்லிம் அபிவிருத்திச் சங்கத்தலைவரும், யாழ் மாவட்டக் காணி அதிகாரியுமான ஜனப் எம். எம். மக்பூல் கூறினர்,

இந்த அங்குரார்ப்பணவைப்வத்திற்கு முன்னர், அல் ஹாஜ் என். எம். என். மீரான்முகைதின் ஆலிம் 'கிராஅத்'ஓதினர். பிரதமவிருந்தினர்களாக, யாழ் எம். பி. வெ.யோகேஸ்வரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம், யாழ். வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. எம். ராஜரத்தினம், முன்னாள் அரசாங்க அதிபர் திரு. ஏ ஏ.யோசெப், காணி அதிகாரி திரு. எஸ். சம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வறிய மக்கள்

ஜனப் எம். எம். மக்பூல் வைபவத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில், ''பொம்மைவெளியில் குடியிருக்கும் குடும்பத்தினரில்பெரும்பாலானோர் வறியமக்களாவர். அவர்கள், தாமாக வசதியான வீடுகளைக் கட்டிக்கொள்ளமுடியாதவர்கள். அவர்கள் அனைவருக்கும் அரசின் உதவியுடன், வீடுகளை அமைக்க எமது சங்கம் தொடர்ந்துபோராடுமென உறுதியளிக்கிறேன்' என்ருர்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் உரையாற்றுகையில் 'பொம்மைவெளி குடியேற்றத்திட்டத்தில் வாழும் மக்களின் கஷ்டங்களை போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். எதிர்காலத்தில் பொம்மைவெளியைநவீன நகராக்குவேன். இங்குவாழும் மக்கள் ஒவ்வொருவரும் வீட்டுக்கு ஐந்து மரங்களையாவது நாட்டி பொம்மைவெளியைச் சோலையாக்கவேண்டும்' என்ருர்.

யாழ்.மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. கே.சிவஞானம் பேசுகையில், 'பொம்மைவெளிக்குப் புதிய கட்டிடங்களை அமைக்க தண்ணீர்தாங்கிகள்மூலம்யாழ் மாநகரசபைநீர் வழங்கும். நீர்விநியோகத்தையும் விரைவில் அமுல்செய்யும்' என்ருர்.

மற்றும் உத்தியோகஸ்கர்களும் பிரமுகர்களும் பேசினர். (கெ-அ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாக மாவட்ட நீதிமன்றம்

இல: ஈடு/1441

1. வயிரமுத்து இராமநாதனும்
2. பெண் மகேஸ்வரியும் இருவரும் குடிபிருப்பு, சுழிபுரம்

வழக்காளிகள்

எதிராக

1. ஆறுமுகம் கந்தையாவும்,
2. பெண் சிதம்பரமும் இருவரும் கல்லைவேம்படி, சுழிபுரம்.

எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் 1441-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணிகள் 1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6-ந் திகதி (6-10-78) வெள்ளிக்கிழமை 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி 6200/- 22-9-76 தொடக்கம் 1-6-77 வரைக்கும் 5000/- வருடமொன்றுக்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரைக்கும் 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 648-70 சதம் இதில் கொடுக்கப்பட்டுள்ளது 2000/- கழித்து மிகுதியை அறவிடவும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சுழிபுரமிறை.

1. அறுகொல்லை பரப்பு நெல் இலாச்சம் பத்தும் (பர. நெ. இல. 10) கிணறும் எல்லை கிழக்கு சண்முகம் கைம்பெண் கண்ணுத்தைக்குரிய காணி வடக்கு சரவணமுத்து தம்பாப்பிள்ளையின் உரிமைக்காரருக்குரிய காணி, மேற்கு கந்தையா பெண் சிதம்பரத்துக்குரிய காணி.

2. கூரார்தோட்டம் பரப்பு நிலை இலாச்சம் ஆறரையும் (பர. நிலை, இல ஆறரை) பனைகளும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு சின்னப்பு கைம்பெண் நாகமுத்துவுக்குரிய காணி வடக்கு சந்திரராசா பெண் முத்துப்பிள்ளைக்குரிய காணியும் ஒழுங்கையும் மேற்கு ஒழுங்கையும் மயில்வாகனம் சங்கரப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய காணிகளும் தெற்கு வேலு நாகமுத்துவுக்கும் நடராசா கைம்பெண் பூரணத்துக்குமுரிய காணிகள். இதடங்கலும் மேற்கெல்லை ஒழுங்கையின் மேற்கெல்லையில் தம்பிஐயா பெண் செல்லத்தின் காணிக்குள்ளிருக்கிற கிணற்றில் பங்கும் இறை வாய்க்கால் தூர்வை வழியும்.

3. காட்டுப்புலம் பரப்பு நிலை இலாச்சம் ஒன்பது. இதில் கிழக்குப் பக்கமாகப் பரப்பு நிலை இலாச்சம் நாலரையும் (பர, நிலை. இல நாலரையும்) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு வேலு கிருஷ்ணருக்குரிய ஆதனம், வடக்கு அம்பலவாணர் சரவணமுத்துவுக்குரிய காணி, மேற்கு வேலு கிருஷ்ணருக்குரிய இதன் மிகுதியாதனம், தெற்கு கந்தையா கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்குரிய ஆதனம் இதடங்கலும்.

4. காட்டுப்புலம் பரப்பு நிலை இலாச்சம் நாலரையும் (பர. நிலை. இல. நாலரையும்) பனைகள் வடலிகளும், எல்லை கிழக்கு ஆறுமுகம் கந்தையா பெண் சிதம்பரத்துக்குமுரிய காணி, வடக்கு மருது பெண் வள்ளருக்குரிய காணி, மேற்கு கந்தையா கைம்பெண் தெய்வானைக்குரிய காணி, தெற்கு வாய்க்கால் இதடங்கலும்.

மு. விஜயராசன்,
நீதிமன்ற விற்பனவு விலைமதிப்பாணையாளர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
10-9-78. 0473

## உதைபந்தாட்டம்

(அரியாலை)

யாழ். பரியோவான் கல்லூரி முதலாம் பிரிவு உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும் அரியாலை ஸ்போட்ஸ்கிளப் முதலாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் அரியாலைக் கோஷ்டி 3—2 கோல்கள்ால் வெற்றியீட்டியது.

இரண்டாம் பிரிவுக்கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் இருகோஷ்டிகளும் தலா 1—1 கோல்களை அடித்துச் சமமாக்கிக்கொண்டது. இப்போட்டிகள் யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (அ)

## "தேவாலயத்தில் சாதிப்பாகுபாட்டை நீக்குக"

(பண்டத்தரிப்பு)

இளவாலை பகுதியிலுள்ள கத்தோலிக்க தேவாலயமொன்று கடந்த பல வருடங்களாக சாதிப் பாகுபாடு காரணமாக பூசைகள் எதுவுமின்றி இயங்காத நிலைமையில் இருந்து வருவதாகவும் இதையிட்டுச் சுமூகமான நடவடிக்கை மேற்கொண்டு வழமைபோல இவ்ஆலயத்தை இயங்கச் செய்யுமாறும் இப் பகுதி மக்கள் தமிழர்விடுதலைக் கூட்டணிச் சமூகக்குறைபாடுகள் ஒழிப்பு உபகுழுவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் வேண்டியுள்ளார்கள். (அ)

## நவராத்திரிவிழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துமகளிர் மகாவித்தியாலயத்தில் இன்று நவராத்திரிவிழா நடைபெறுகிறது.

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் கு. வி. மகாலிங்கம் சிறப்புரையாற்றுவார். வித்தியாலய சைவசமயக் குழுவிழா ஏற்பாட்டைச் செய்துள்ளது. (அ)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலைக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் புதிய கட்டடம் ஒன்று அமைப்பதற்கு மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் இருபதினுயிரம் ரூபா ஒதுக்கியுள்ளார். இக் கட்டடத்தை வெகு விரைவில் கட்டி முடிக்க வித்தியாசாலை அதிபர் திரு. அ. தற்பரானந்தன் சகல முயற்சிகளையும் எடுத்துள்ளார். (உ)

ஈழநாடு
The Eelanaadu

# "பெரிய கட்டிடங்கள் உள்ள கல்லூரிகளில் மட்டும்தான் கல்வி சிறப்புற முடிகிறதா?"

## நல்லூர் சிவா கேட்கிருர்

(கொக்குவில்)

'பிரமாண்டமான கட்டிடங்கள் இருந்தால் தான் சிறப்பாகக் கல்வி கற்க முடியும் என்ற தப்பபிப்பிராயம் நம்மாணவர் மத்தியில் நிலவும் நிலை நீங்க வேண்டும்'' என்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி யுமான திரு. எம். சிவசிதம்பரம் கூறினுர்.

கொக்குவில் மேற்கு ஞான பண்டித வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னுர்.

கல்லூரி அதிபர் திரு. ரி. தர்மலிங்கம் தலைமையில்நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''நான் ஆரம்பத்தில் ஒரு சிறிய பாடசாலையில்தான் கல்வி கற்றேன். என்னைப் போன்று பலரும் சிறிய பாடசாலைகளில் பயின்றே உயர் நிலையடைந்துள்ளனர்.

ஒரு சில பிள்ளைகள்தான் இங்கு பரிசுபெற்றனர். பரிசுபெற்றபிள்ளைகள்தான்திறமைசாலிகள் என்று எண்ணிவிடக் கூடாது. ஒழுக்கமான பிள்ளைதான் பிற்காலத்தில் திறமைசாலியாகவும் முற்போக்குவாதியாகவும் வரமுடியும் ஒவ்வொரு பிள்ளைகளும் கல்வி கற்கும் போதே ஒழுக்கத்தையும் கற்கவேண்டும்.

சகல பாடசாலைகளிலும் பிள்ளைகளுக்குத்தான் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இப்பாடசாலையில் லீவு எடுக்காது தினமும் பாடசாலைக்குவருகை தந்த ஆசிரியர் திரு. நடராஜாவுக்கு பரிசில் வழங்கப்பட்டது வரவேற்கத்தக்கது.

கட்டிடத்தின் உயர்ச்சியில் தான் பாடசாலையின் வளர்ச்சி தங்கி இருக்கிறது என்ற தப்பபிப்பிராயம்மாற வேண்டும். ஆசிரியர்களின் திறமையில்தான் பாடசாலையின் வளர்ச்சி தங்கி இருக்கிறது.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.கு.சோமசுந்தரம் தொழிலதிபர் திரு. க. கனகராஜா, குமாரசாமிப்புலவர் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். திருமதி கனகராஜா பரிசில்கள் வழங்கினுர்.

# இலங்.--இந்திய பண்பாட்டு தொடர்புகள்

''இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பண்பாட்டுறவுஒன்றிற்கொன்று இருவழித் தொடர்பாக அமைந்தால் மாத்திரமே நன்மையாக இருக்கும். இருநாடுகளினதும் நட்புறவின் எதிர்காலம் பண்பாட்டுத் துறையில் ஈடுபட்டோரின் பரிமாற்றத்திலேயே அமையும்'' என்று இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. தோமஸ் ஏபிரகாம் சில தினங்களுக்கு முன் இலங்கை - இந்திய பண்பாட்டுக் கழகம் கொழும்பில் அளித்த இரவு விருந்துபசாரத்தின் போது உரையாற்றுகையில் கூறியிருக்கிறுர்.

சரித்திரகாலத்துக்கு முன்பிருந்தே இரு நாடுகளுக்குமிடையில் கலை, கலாசாரப் பண்பாட்டு அரசியல் துறைகளில் தொடர்புகள் இருந்துவருகின்றன.

துணைக்கண்டத்தில் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட இந்திய பெருநிலத்திலிருந்தே அதன்அருகாமையிலுள்ள இலங்கை போன்ற பல நாடுகளுக்கும் கலை கலாச்சார சமய, சிந்தனைகள் பரவலாயின. இன்றும் நம் நாட்டில் நாம் நமது அரும் பொக்கிஷங்களாகக் கருதி போற்றிப் பேணிவரும் கலைகளும், கலாச்சாரப் பண்பாடுகளும் சமயக்கோட்பாடுகளும் இந்திய மண்ணிலிருந்து இங்கு வந்தவையே.

காலத்துக்குக்காலம், அப்பரந்த நாட்டிலிருந்து சமயப் பெரியார்களும், கலைவாணர்களும், அரசியல் மேதைகளும் இங்குவந்து நமது கலாசாரப் பண்பாடுகளையும், அரசியல் நாகரிகத்தையும் வளர்க்க உதவிவந்திருக்கிறுர்கள்.

அவ்வாறுன மேதைகள் நம்நாட்டிலிருந்தும் அங்கு சென்றுதான் இருக்கிறுர்கள். ஆனுல் அப்படியான நிகழ்ச்சிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

காலம்மாறிவிட்டது. கருத்துக்களும் மாறுகின்றன. விடுதலை பெற்ற நாடுகள் தமக்குரிய தனித்துவங்களைப் பேணுமுனைகையில் வேற்று நாடுகளுடனுன தொடர்புகள் தொடர்ந்தும் ஒருவழிப்பாதையாக இருக்கமுடியாது.

அந்தவகையில் இந்திய ஸ்தானிகர் வெளியிட்டுள்ள கருத்து வரவேற்கத் தக்கது.

இந்தக் கருத்தினை அவர் வெளிபிட்டதோடு அமையாமல், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பண்பாட்டுத் தொடர்புகள் மேலும் விரிவடையவும், இங்கிருந்தும் கலாசாரப்பண்பாட்டுப் பிரதிநிதிகள் அந்நாட்டுக்குச் செல்லவும், நமது கலை ஆக்கங்களை நியாயமான அளவில் பாரத மக்கள் சுவைக்கவும் வழி சமைக்கவேண்டும்.

இதனைத் தமது முக்கிய பணிகளில் ஒன்றாக கருதி அவர் செயல்படவேண்டும்.

# சமயகீதப் போட்டியில் முதலிடம் பெற்றனர்

(தெல்லிப்பழை)

காங்கேசன்துறை கல்வி வட்டார சமயகீதப் போட்டிகளில் முதலிடம் பெற்றோர் விபரம்:

பண்ணிசைப்போட்டி: மேற்பிரிவு: செல்வி செ. ஹம்சாந்தி (மகாஜனக்கல்லூரி), மத்தியபிரிவு: செல்வி சு. மேனகா (யூனியன் கல்லூரி). கீழ்ப்பிரிவு: செ. ம.பவானி (வீமன்காமம் ம,வி).

கிறிஸ்தவகீதப் போட்டி: மேற்பிரிவு:செல்வி செ.பிரதிப ]அளவெட்டி அருணோதயாக் கல்லூரி]. மத்திய பிரிவு: செல்வி ச. மேரீலின் ]இளவாலை கன்னியர்மடம்[ கீழ்ப் பிரிவு; செல்வன் அ. மரியரத்தினம் [இளவாலை றோ. க. ஆண்கள் பாடசாலை[

இப்போட்டிகளுக்கான பரிசில்கள் காங்கேசன்துறை கல்வி வட்டார அதிபர்கள் சங்க நிதியிலிருந்து வழங்கப்படுவதாக அதிபர்கள் சங்க செயலாளர் திரு. த. இராசரத்தினம் தெரிவித்துள்ளார். இப்போட்டிகள் கல்விவட்டார ரீதியாக நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். [ஊ]

# கிராம சிரமைப்பு

(திருநெல்வேலி)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பகுதி நாள் தினத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி காரியாலயப் பிரிவிலுள்ள சகல வெள்ளவாய்க்கால் ஒழுங்கைகளை புனரமைப்பது. குளங்கள் திருத்தல், விளையாட்டுத் துறை, விவசாய அபிவிருத்தி பற்றி ஆராயப்பட்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதில் சகல கிராம சேவை உத்தியோகத்தர்களும் பங்கு பற்றினர். இக்கூட்டம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. எஸ். எஸ். அகஸ்தின் தலைமையில் நடைபெற்றது. (உ)

# மர விநியோகம் நிறுத்தப்பட்டது

(சங்கானை)

வலி-மேற்குப் பிரிவில் சங்கானை, சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், மானிப்பாய், பண்ணுகம். சுளிபுரம் போன்ற பகுதிகளிலிருந்து வீடுகள், கட்டிடங்கள் அமைப்பதற்கு மரங்களுக்கு விண்ணப்பித்திருப்போருக்கு கடந்த 28ம் திகதியிலிருந்து தற்காலிகமாக மரவிநியோகம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள சில பாடசாலைகளின் தேவையை முன்னிட்டே இந்த உத்தரவை மரக்கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கிவரும் சங்கானை விறகு காலைக்கு வடமாகாண வனபரிபான அதிபர் பிறப்பித்துள்ளார்.

# "உணர்ச்சிகள் எந்தப் பயனையும் அளிக்காது"

## நாகநாதன், வன்னியசிங்கம் அஞ்சலிக் கூட்டத்தில் உரை

(கோண்டாவில்)

''தலைவர்கள் மிகவும் அமைதியாக இருந்துதான் எதனையும் செய்யவேண்டும். உணர்ச்சிகள் எந்தப் பயனையும் அளிக்கமாட்டாது.''

கோண்டாவில் மேற்கு, காளி கோவில் முன்றலில் நடைபெற்ற, அமரர்களான டாக்டர் நாகநாதன், வன்னியசிங்கம் ஆகியோரின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் கூறினுர்.

பண்டிதர் நா. இராசையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. துரைரத்தினம் மேலும் கூறியதாவது:

''1972ம் ஆண்டு அரசியல் அமைப்புக்கு எதிராகத் அண்டுப் பிரசுரம் விநியோகஞ் செய்ததற்காக, அன்றைய நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் டண்டாரநாயக்கா, 20 வருடம் எம்மைச் சிறைக்கு அனுப்ப முயற்சித்தார். அவரின இன்றைய நிலையென்ன?

''இவர்களின் நிலைபோன்றில்லாது, நாம் எடுத்த முயற்சியில் வெற்றி பேற்றே திருவோம். வீடுதலை இன்றோ நாளையோ கிடைக்காவிட்டாலும் வெகு விரைவில் கிடைத்தே தீரும்.

''சுயநலவாதிகள் எமது இயக்கத்தில் இன்று ஊடுருவல் செய்கின்றுர்கள். அவர்களை இனங் கண்டுகொள்ளவேண்டியது மக்களின் கடமையாகும்.

''இன்றைய எமது இளைஞர்கள் இங்கு சில தொழில்கள் செய்யப் பின்வாங்குகின்றனர். ஆனுல் மேல்நாடுகளுக்குச் சென்று எத்தகைய கூச்சமுமின்றி எந்தத் தொழிலையும் செய்கின்றனர். இந்நிலை இங்கும் நிலவவேண்டும்.''

ஈழவேந்தன் பேசுகையில், எமது கவலையீனத்தால் புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு ஆகியவற்றை இழந்தோமென்றும் . இனியும் கவலையீனமாக இருந்தால் கிழக்கு மாகாணத்தையும் இழக்க நேரிடுமென்றும் கூறினுர்.

''மேடைகளில் எமது கூட்டணி எம். பி.க்கள் நின்று தமிழ் ஈழம் பற்றிப் பேசுவதிலும் பார்க்க, கண்ணுட்டி, செட்டிகுளம் போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ளவர்கள் குடிபெயர்ந்து செல்லவிடாது தடை செய்யவேண்டும்'' என்றும் ஈழவேந்தன் கூறினுர்.

கோவை மகேசன் பேசுகையில், ''தந்தை செல்வாவின் சமாதியில், ''இயக்கத்தின் முழு நேர ஊழியராக இயங்குவோமெனச் சத்தியஞ்செய்தவர்களில் இன்று எத்தனை பேர் முழு நேர ஊழியர்களாக இயங்குகிறுர்கள்'' எனக் கேட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், திரு. வி. தருமலிங்கம், திரு. எம். ஆலாலசுந்தரம், திரு. ஆர். விஸ்வநாதன் ஆகியோரும் பேசினர். (க)

# அமைச்சிடம் எம். பி. வேண்டுகோள்

(புலோலி)

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் உள்ள வாளி மலசலகூடங்களை குழி மலசல கூடங்களாக மாற்றியமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தும்படி பருத்தித்துறை எம். பீ. திரு. க. துரைரத்தினம் உள்ளூராட்சி அமைச்சிடம் கேட்டுள்ளார்.

இம்மாற்றுத் திட்டத்தைச் செயல்படுத்த வரியிறுப்பாளர்களுக்குக் கடனுதவி வழங்க பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒரு பகுதியைத் தாம் ஒதுக்கித் தருவதாகவும் அமைச்சும் ஒரு பகுதிப்பணத்தை ஒதுக்கிஉதவ வேண்டும் என்றும் எம். பீ. கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# காந்தி ச. ச. நிலையம்

(அரியாலை)

அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தக்கூட்டம், தலைவர் திரு த இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக தலைவர் பொன். தேவராசா (ஆசிரியர்). உபதலைவர்: திரு. சி. சந்திரமோகன், செயலாளர்: திரு. ப. ஜீவநாதன், உப செயலாளர்; திரு. மு. புவனேஸ்வரன், [பொருளாளர்: திரு. பொன், பரமநாதன்ஆகியோரும் பத்து நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர், (க)

# இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 17-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(3-10-78)

**மேஷம்:-** நலம்தரும் நிகழ்ச்சிகள் நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு, நேர்மைவழி நிற்பீர்கள், பெரியோர்களின் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:-** கொடுக்கல் வாங்கல் மூலம் அபிப்பிராய மோதல்கள் ஏற்படும், கடன் தொல்லை அதிகரிக்கும், நண்பர் ஒருவர் உம்மைத் தவறுன பாதையில் இழுத்துச் செல்வார், மௌனம்நன்மை தரும்.

**மிதுனம்:-** வியாபாரத் துறையில் விருத்தியுண்டு. செய்தொழில் சிறப்படையும், வாழ்க்கையில் சுமுகமானநிலையும் தென்படும்.

**கடகம்:-** எதிர்பார்த்த நற்செய்தி இன்று கிடைக்கும், பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றம்காணப்படும், வசதிகள் பெருகும்.

**சிங்கம்:-** உறவுமுறையில் வெடிப்பு ஏற்படும், பண விவகாரத்தின்போது பகை தோன்றலாம், தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும், நிதானம் வேண்டும்.

**கன்னி:-** ஆத்திரப்படுவதால் அனர்த்தங்கள் விளையக் கூடும், எதிலும் பொறுமையுடன் இருப்பது விரும்பத்தக்கது, உடல்நலமும் பாதிக்கப் படலாம் சுகாதாரம் வேண்டும்.

**துலாம்:-** இல்லத்தில் இன்று இனிமையான சம்பவங்கள் இடம் பெறலாம், வாக்குவன்மையின்மூலம், பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு,

**விருச்சிகம்:-** எதையும் முன்னிலையில் நின்று செய்வதை இன்று பின்போடவும்? பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு, விஷமிகளின் புனைந்துரைகள் உங்களுக்கு வேதனையைத் தரும், பொறுமை நன்று.

**தனுசு:-** முன்னேற்றமான காரியங்களில் எதிர்பாராத தடைகள் ஏற்படும், சகோதர வழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு, பூமிப்பிணக்குகளைத் தவிர்த்துக்கொள்ளவும், புதிய பணிகளில் தாமதம் தென்படும்.

**மகரம்:-** ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் பிறக்கும், கலைஞர்களுக்கு முன்னேற்றம் தென்படும, வாகன உரிமையாளர்களின் ஆதாயம் பெருகும். தாய்வழிமூலம் தனவரவுக்கும் இடமுண்டு.

**கும்பம்:-** காதலர்கள் வாழ்க்கையில் கனிவான சம்பவங்கள் இடம் பெறும். இனத்தவர்கள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், நீண்டநாள் பிரயாணம் குறித்து திட்டமிடப்படலாம், நல்லநாள்.

**மீனம்:-** துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், சிறிய தலையிடிக்கு இடமுண்டு, புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக்கொள்ளவும், பிரயாணத்தைப் பின் போடுவது விரும்பத்தக்கது.

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

# மணிவாக்கு

உன்னிடமிருப்பதை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடு.
—சுவாமிசிவானந்த சரஸ்வதி.

## ரஷ்யாவிலும் வேறுசில நாடுகளிலும்

# அமெரிக்க செய்மதிகள் உளவு நடவடிக்கை

### அமெரிக்க அதிபர் முதல்தடவையாக ஒப்புக்கொண்டுள்ளார்

வாஷிங்டன், அக். 2

சோவியத்யூனியனிலும் மற்றும் சில நாடுகளிலும் செய்மதி மூலம் அமெரிக்கா உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது என்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் தெரிவித்துள்ளார்.

இந்த உண்மையை திரு. கார்ட்டர் வாஷிங்டனில் நடைபெற்ற தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் 70வது ஆண்டு மகாநாட்டிலேயே முதல்தடவையாக உத்தியோகபூர்வமாக ஒப்புக்கொண்டார்.

உலக விவகாரங்களில் அமெரிக்க செய்மதிகள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன என்றும் தெரிவித்த திரு. கார்ட்டர் உலகநாடுகளில் செய்மதிகள் மூலம் உளவு நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாதது என்றும் தெரிவித்தார்.

செய்மதி உளவு நடவடிக்கைகள் உலக நாடுகளில் அளப்பரிய சேவையை ஆற்றிவருகின்றன என்றும் அவர் கூறினார். (இ)

## வல்லிபுர உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 30ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இம்மாதம் 14ம் திகதி தேர்த்திருவிழாவும் 15ம் திகதி சமுத்திர தீர்த்த உற்சவமும் நிகழும். (அ)

## கத்தோலிக்க உலகம் தவிக்கிறது

(யாழ்ப்பாணம்)

'பதவியேற்ற ஒருமாத காலத்திற்குள் பாப்பரசருக்கு ஏற்பட்ட முடிவுகண்டு கத்தோலிக்க உலகம் தவிக்கின்றது' என்று மானிப்பாய்த்தொகுதி கத்தோலிக்க பிரமுகரான திரு ஆர். எஸ். அலோசியஸ் தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சியை ஏற்படுத்தி கத்தோலிக்க மக்களை அன்புப் பாதையில் வழிநடத்திச் செல்வார் என்று எண்ணி இருந்த எமது நம்பிக்கை கனவாகி விட்டது என்று அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார். (அ)

## மத்திய கிழக்கு அமைதி:

# கார்ட்டர் அயராது பாடுபட்டு வருகிறார்

### வால்ட்ஹெய்ம் பாராட்டு

புளோரிடா, அக். 2

மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் அயராது பாடுபட்டு வருகிறார் என்று ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த்வால்ட்ஹெய்ம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

புளோரிடாவில் நடைபெறும் மகாநாடு ஒன்றில் பேசுகையிலேயே அமெரிக்க அதிபரை பொதுச்செயலாளர் பாராட்டினார்.

முன்எப்போதும் இல்லாதவாறு காம்ப்டேவிட் மகாநாட்டை கூட்டிய திரு. கார்ட்டர் மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் பெரும் பங்கெடுத்துக்கொண்டார் என்றும் டாக்டர் வால்ட்ஹெய்ம் தெரிவித்தார். (இ)

# பாண்டிச்சேரி அரசு ஊழல்: விசாரிக்கக் கமிஷன்

### ஜனதா கட்சிக்கிளை கோரிக்கை

புதுச்சேரி, அக். 2

பாண்டிச்சேரியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள லஞ்ச ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றை விசாரணைசெய்வதற்காக கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு ஜனதாகட்சியின் பாண்டிச்சேரிகிளை மத்திய அரசைக்கோரியுள்ளது.

ஆளும் அ. தி. மு. க. அரசை உடன் கலைக்குமாறு இக்கிளை மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ)

# எகிப்து இஸ்ரேல் பேச்சு வாஷிங்டனில் 78 இறுதியில் நடக்கும்

### காம்ப்டேவிட் தீர்வுக்கு எதிராக ரஷ்ய ஆதரவை திரட்டுகிறார் ஆஸாத்

வாஷிங்டன், அக். 2

மத்தியகிழக்கு சமாதானம் குறித்து எகிப்தும் இஸ்ரேலும் இவ்வருட இறுதியில் வாஷிங்டனில் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் என்றுஎதிர்பார்க்கப்படுவதாக வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

காம்டேவிட் மகாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்றும் தெரிகிறது

இதேவேளையில் காம்ப் டேவிட் தீர்மானத்திற்கு எதிரான அரபுநாடுகளுக்கு ரஷ்ய ஆதரவைப் பெறும் முயற்சியில் சிரிய அதிபர் ஹாபிஸ் ஆஸாத் ஈடுபட்டுள்ளார் இதன்முதற்கட்டமாக அவர் கிழக்கு ஜேர்மன் சென்றுள்ளார் விரைவில் அவர் சோவியத்யூனியனுக்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டது. (இ)

# மே. வங்க வெள்ளநிலைமை இன்னும் சீராகவில்லை

### 165 பேர் இதுவரை பலி!

கல்கத்தா. அக். 2

மேற்குவங்காளத்தின் வெள்ளத்தின் கொடுமையினால் இதுவரை 165 பேர் பலியாகியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ள நிலைமை மேலும் மோசமாகிக்கொண்டேபோவதாகவும், 15 இராணுவ வீரர்களும் விமானப்படையினரும் வெள்ளநிவாரணப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர். 50 விசைப்படகுகளும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. (இ)

## நெசவு நூல்கள்

# கொழும்பு விலைக்கே வடக்கிலும் பெறலாம்

(மட்டுவில்)

கைத்தறி, புடைவைக் கைத்தொழில் அமைச்சிற்கு ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைக் குழுவுக்கு இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் 15 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்குழுவிற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. எஸ். நவரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த 15 உறுப்பினர்களும் கடந்த 4ம் திகதி கொழும்பில் பிரதியமைச்சர் திரு. தர்மதாச பண்டார தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டனர்.

பிற நாடுகளிலிருந்து கைத்தறி உற்பத்திகளை இலங்கைக்குக் கொண்டுவருவதை ஏற்கனவே கட்டுப்படுத்தியிருந்த போதிலும், இந்த கைத்தொழில் உற்பத்திப் பட்டியலில் சேலைகள் இடம்பெறவில்லையென்றும் அதையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற திரு. நவரத்தினத்தின் கோரிக்கையை அமைச்சு ஏற்றுக்கொண்டது.

மேலும் வடபகுதி கைத்தறி நெசவாளருக்கான நெசவு நூல்களை, நூல் விநியோகஸ்தர்கள் கொழும்பில் கொள்வனவு செய்யும் விலைக்கே வடக்கிலும் விநியோகம் செய்ய வேண்டும் என்றும், நூல் விநியோகஸ்தர்களுக்கு இரண்டரை வீதம் கமிஷன் வழங்க வேண்டும் என்றும் திரு. நவரத்தினம் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, இக்கோரிக்கையையும் அமைச்சு ஏற்றுக்கொண்டது. (க)

## 12 பேருக்கு சிபார்சு

(உருத்திரபுரம்)

கிளிநொச்சித் தொகுதியில் சமாதான நீதவான்களின் பற்றுக் குறையை நிவர்த்தி செய்வதற்காக கிளிநொச்சித் தொகுதி தேசியப்பேரவை உறுப்பினர் திரு.வி. ஆனந்தசங்கரி அத் தொகுதியைச் சேர்ந்த 12 பேரைச் சிபார்சு செய்துள்ளார். (க)

# "கல்விப்பணிக்கு நம்மை அர்ப்பணிப்பதே காந்திஜிக்கு நாம் செய்யும் அஞ்சலி"

### மொரார்ஜி தேசாய் செய்தி

புதுடில்லி, அக் 2

வறுமையையும் எழுத்தறிவின்மையையும் அடியோடு அழித்தொழிக்க அயராது உழைத்தார். தேசபிதா காந்திமகான் இன்று கல்விப் பணிகளில் நாமெல்லாம் நம்மை அர்ப்பணித்துக்கொள்வதே அன்னாருக்குச் செய்யும் தலைசிறந்த அஞ்சலியாகும்.

இந்தியப் பிரதமர் திரு, மொராஜிதேசாய் மகாத்மா காந்தியின் 110வது ஜயந்தி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமது செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எழுத்தறிவைப் பரப்பவும் கல்வியின் மூலம் மக்களின் சுயஅறிவைப் பெருக்கவும் காந்தி அடிகள் பாடுபட்டு உழைத்தார். காந்திஜியின் பாதையில் நாமும் சென்று வறுமையையும், அறிவின்மையையும் ஒழிக்க நாமெல்லோரும் உறுதிபூணவேண்டும். இந்தியாவுக்கு அந்நியநாட்டினரிடமிருந்து விடுதலைபெற்றுத்தந்தால் மட்டும் மகாத்மா காந்தியை நாம் தேசபிதா எனப் போற்றவில்லை தீண்டாமையை ஒழிக்கவும், மதுவிலக்கை அமுல்செய்யவும், மகளிரின் கல்வி, அந்தஸ்து ஆகியவற்றை மேம்பாடு அடையச்செய்யச் செய்யவும் அயராது உழைத்தமையினாலேயே அவரை தேசபிதா எனப் போற்றுகிறோம்.

காந்திஜியின் கனவுகளை நனவாக்க இன்றைய அரசு பல திட்டங்களை திட்டியுள்ளது. அவற்றை திறம்பட செயலாக்க பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும். [இ]

# கொட்டும் மழையில் பாப்பரசருக்கு அஞ்சலி

வத்திக்கான், அக். 2

காலஞ்சென்ற புதிய பாப்பரசர் முதலாவது அருளப்பர் சின்னப்பரின் பிரேதபரிசோதனையை நடத்த வத்திக்கான் அதிகாரிகள் தவறிவிட்டனர் என்று வத்திக்கானில் குற்றச் சாட்டியுள்ளனர்.

இதேவேளையில் சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள அருளப்பரின் பூதவுடலுக்கு பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாத மக்கள கூட்டம் கண்ணீர் சிந்தியபடிமறைந்த பாப்பரசருக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனர். (இ)

## கட்டுவன் வெற்றி

[யாழ்ப்பாணம்]

குப்பிளான் விநாயகர் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கட்டுவன் மத்தி விஸ்வநாதப்புலவர் சனசமூகநிலைய விளையாட்டுக் கழகத்தினர் கட்டுவன் பறக்கும் தட்டு விளையாட்டுக்கழகத்தினரை 3ம் பிரிவில் 5-0 கோல்களாலும் 2ம்பிரிவில் 4-2கோல்களாலும் வெற்றிபெற்றனர். (இ)

## சிரமதான வேலைகள் துரிதம்

[சங்கானை]

வட்டுக்கோட்டைத் தொகுதியில் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு வினால் ஆரம்பிக்கப்பட்ட சிரமதானப் பணிகளில் பெருமளவு முடிவடைந்துவிட்டன.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வி. சுப்பிரமணியத்தின் மேற்பார்வையிலே நடைபெற்ற இச் சிரமதானப்பணியில் குளங்கள் ஆழமாக்குதல், வெள்ளவாய்க்கால், வீதிகள் செப்பனிடல் ஆகியவை அடங்கும். [உ]

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
MISTRESS PAMILA
(Adults only)

வெஸ்லி
(மானிப்பாய)
தினசரி 6-30, 9-3
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
கண்ணன் வருவான்

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
ஜெமினி-பத்மினி
மீண்டசொர்கம்

## "தீண்டாமைக்கு முற்றுப்புள்ளி வைக்க..."

(யாழ்ப்பாணம்)

"தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் கலப்புத் திருமணம் செய்யத்தயாராக இருந்தால் மட்டுமே தீண்டாமைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்" இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக் கோட்டைத் தொகுதி பிலவத்தைக் கிளைச் செயலாளர் திரு. என். ஜயம்பிள்ளை கூட்டணியினரின் தீண்டாமை ஒழிப்பு இயக்கம்பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார். காலத்துக்குக் காலம் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்து இடையில் கூட்டணியினர் அதை நிறுத்திவருகின்றனர் என்று அவர் இவ்வறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார். (உ)

# "சகல பொருள் விநியோகத்தையும் கூட்டுறவுதுறைக்கே வழங்கி

## ஊழியர்சம்பளத்தை உயர்த்த வேண்டும்"

[யாழ்ப்பாணம்[

"சகல பொருள் விநியோகத்தையும் கூட்டுறவுத் துறைக்கே வழங்கி கூட்டுறவு ஊழியர்களுக்கு 150 ரூபா அடிப்படைச்சம்பளம் உயர்த்தப்படவேண்டும்".

இக் கோரிக்கை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்களில் சிலவருமாறு:

"கூட்டுறவு ஊழியர்களுக்கு மற்ற ஊழியர்களைப்போல் விவாகப்படி வழங்கவேண்டும். சேமலாபநிதி 25 வீதமாக உயர்த்தப்படவேண்டும். ஸதோச சலுசல நிறுவன ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் போன்று கூட்டுறவு ஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டும். பணியாளர்களுக்கான ஆளணித்திரட்டு வழங்கப்படவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து இடைநீக்கம் செய்யப்படும் ஊழியர்களின் விசாரணையை ஒரு மாதத்தில் முடிக்கவேண்டும், அக்காலத்துக்கு அவர்களுக்கும் மாதச் சம்பளத்தில் அரைப் பங்காவது வழங்கவேண்டும், ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கத்துக்கும் நெல் சந்தைப்படுத்தும் சபையின் முகவர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்களுக்கு வழங்கப்படும் கழிவுகள்போன்று வழங்கப்படவேண்டும்".

"உத்தியோகத்தர் தெரிவில் தலைவராகப் போட்டியின்றி திரு. சி. க. திருச்சிற்றம்பலம் தெரியப்பட்டார். செயலாளருக்கு ஐவர் போட்டியிடவே போட்டிக்கு விடாமலேயே ஐவருக்கும் இடையில் சமரசம் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டது. ஆயினும் ஐவரும் சேர்ந்து போட்டியிட முன்வராத முன்னுள் செயலாளரைப் பதவியை ஏற்கும்படி வற்புறுத்தியதைத் தொடர்ந்து திரு. த. இராஜேந்திரம் செயலாளராக ஏகமனதாகத் தெரியப்பட்டார். உபதலைவராக திரு. எம். கே. சிகாமணி, உபசெயலாளராக திரு. பொ. சிவபாதம், பொருளாளராக திரு. மு. வேலாயுதபிள்ளை, உப பொருளாளராக திரு. ஏ. ஏ. குணசேகரம், செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் அ. இலட்சியபூபதி, சு. யோகநாதன், சோ. அருணகிரி, க. பாலராஜன், சு. கதிர்காமநாதன், வெ. சிவராஜா, ஏ. சீமான். ஏ. பி. நொயல் இம்மானுவல், எஸ்.. கனகரத்தினம் ஆகியோரும் தெரிவானர்கள். (கெ-க)

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
என்.டி.ராமராவ்-அஞ்சலிதேவி
நடித்த
பட்டி விக்கிரமாதித்தன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-சோ
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00 & 9-30 p. m
Glendo Jackson, Oliver Reed in
THE TRIPLE ECHO
(Color-adu ts only)

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் 140-வது தினமாக
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் யாழ். நகர்
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தங்கத்திலே வைரம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி சரோஜாதேவி
நடித்த
தாமரை நெஞ்சம்
(புத்தம்புதிய பிரதி)

சாந்தி (யாழ்ப்பாணம்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
நாகேஷ்...ராஜ்ஸ்ரீ... முத்துராமன்
(இரு வேடங்கள்) K. பாலசந்தரின்
அனுபவி ராஜா அனுபவி
(புதிய பிரதி)
அடுத்த வெளியீடு புதிய பிர்தியாக புதுப் பொலிவுடன் புரட்சி நடிகரின் அரச கட்டளை

5-10-78 வரை மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சிவாஜிகணேசன் கிரிஜா-கண்ணாம்மா
T. R. ராஜகுமாரி S. A. நடராஜன் நடித்த
மனோகரா (புத்தம் புதிய பிரதி)

## கரபந்தாட்ட கால் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இடைக்காடு சனசமூக நிலைய ஆதரவில் மின்னொளியில் நடைபெற்று வரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய கால் இறுதி ஆட்டத்தில் (6 வீரர் ஆட்டம்) சிறுப்பிட்டி மக்கள் வி. க. 'பி', உடுப்பிட்டி இமையாணன் வி. க. 'சி', தொண்டமானாறு வி. க., தொண்டமானாறு சிறீமுருகன் வி. க, அச்சுவேலி ஐக்கிய வி. க, வல்வை திருவில் வி. க. 'ஏ' ஆகியனவும் 4 வீரர் ஆட்டத்தில் சிறுப்பிட்டி தெற்கு மக்கள் வி. க. 'ஏ', சிறுப்பிட்டி உதயராணி வி. க. 'ஏ', வல்வை குணரேகரர் வி. க. 'பி', உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி. க, கதிரிப்பாய் முரசொலி வி. க. 'ஏ', நீர்வேலி ஸ்ரார் வி. க. ஆகியனவும் மோதுகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் உடுப்பிட்டி இமையாணன் வி. க. 'சி' 6 வீரர் ஆட்டத்திலும், 4 வீரர் ஆட்டம் கால் இறுதிப் போட்டிகளில் சிறுப்பிட்டி தெற்கு மக்கள் வி. க. 'ஏ', நீர்வேலி விநாயகர் வி க, தொண்டமானாறு சிறீமுருகன் வி. க. 'ஏ' ஆகியனவும் வெற்றி பெற்றுள்ளன. (இ)

லொறிக் கொள்ளை.

## சந்தேகநபர்கள் இன்று ஆஜர் செய்யப்படுவர்

(புலோலி)

பட்டப்பகலில், லொறிச் சாரதியைப் பயமுறுத்தி 82,000 ரூபா பெறுமதியான லொறியையும் அதிலிருந்த 750 ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டியையும் கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப்படும்சம்பவமொன்று பருத்தித்துறைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக செல்லத்துரை குணசிங்கம் என்பவர் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்ததையடுத்து பருத்தித்துறை உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நந்தலால், சார்ஜன்ட் திரு. செ. மாணிக்கராஜா ஆகியோரைக்கொண்ட பொலிஸ் கோஷ்டி தேடுதல் வேட்டையை ஆரம்பித்து. அப்போது குறிப்பிட்ட இலக்கத்தையுடைய லொறி வீதியில் சென்று கொண்டிருந்ததைக் கண்ட பொலிஸ்கோஷ்டி அதனை நிறுத்த லொறியின் முன் சென்றபோது, லொறிக்கு முன்னுல் சென்று கொண்டிருந்த ஒரு காரும் சந்தேகத்திற்கிடமான முறையில் சென்றுகொண்டிருந்ததாம். இதைக் கண்டதும் பொலிசார் காரையும் நிற்பாட்டச் சைகை காட்டியபோது கார் மிக வேகமாகச் செல்ல ஆரம்பித்ததாம். பின்தொடர்ந்த பொலிஸ் கோஷ்டி துப்பாக்கிப் பிரயோகம் செய்து காரை நிறுத்தினராம்.

காரில் இருந்த 4 நபர்களையும் லொறிக்குள் இருந்த 4 நபர்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தபொலிசார் வாகனங்களையும் கைப்பற்றினர். தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் இச் சம்பவத்திற்கு மூலகாரணமாக இருந்ததாக சந்தேகிக்கப்படும ஆர். நவரத்தினம் என்ற நபரையும் கைதுசெய்தனர்.

ஒன்பது சந்தேகநபர்களும் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் சந்தேகநபர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு நீதிபதியைக் கேட்டனர்.

பொலிசார் சார்பில் சார்ஜன்ட் மாணிக்கராஜா காரணங்கள் பலவற்றை நீதிபதிக்கு எடுத்துக்காட்டி சந்தேகநபர்களைப் பிணையில் விடவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

வாகனங்களைப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கும்படியும், சந்தேகநபர்களை இன்று 3ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டார். [அ]

கிளிநொச்சியில்

## களவுபோன பொருட்கள் பண்டாரவளையில் மீட்பு

(கிளிநொச்சி)

கடந்த ஒரு மாதத்திற்குள்ளாகக் கிளிநொச்சிப் பட்டணத்தில் நடைபெற்ற இரண்டு களவுகள் தொடர்பாகக் களவாடப்பட்ட பொருட்கள் பண்டாரவளைபோன்ற தூர இடங்களிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளன.

ஒருவர் கொடுத்த தகவலகளைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பொலிஸ் குற்றப் பிரிவைச் சேர்ந்த சார்ஜண்ட் நடராஜலிங்கம் வல்லிபரநாதன், நியூட்டன் ஆகியோரைக் கொண்ட பொலிஸ் கோஷ்டி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ச. பரராசசிங்கம், ச. பரமசிவம், கிளிநொச்சியைச் சேர்ந்த அ. மயில்வாகனம், க. சண்முகநாதன் என்போரைக் கைது செய்து களவாடப்பட்டதெனக் கருதப்படும் பொருட்களை பண்டாரவளை, புங்குடுதீவு, மாங்குளம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்தும் மீட்டுள்ளார்கள்.

கிளிநொச்சியில் உள்ள நீர்ப்பாசன இலாகா விடுதிகளை உடைத்து 8000 ரூபா பெறுமதியான பொருட்களும் ஒரு ஆசிரியையின் வீடும் இதே பாணியில் உடைக்கப்பட்டு 3500 ரூபா பெறுமதியான சேலை, சட்டை, நகைகளும் அண்மையில் களவுபோயிருந்தன.

இக்களவு தொடர்பான சகல பொருட்களையும் மீட்டுள்ள கிளிநொச்சிப் பொலிசார் கைது செய்த நால்வரையும் கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதவான் கைது செய்யப்பட்டவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

## மிளகாய் விலை மேலும் சரிவு

(உருத்திரபுரம்)

கிளிநொச்சியில் மிளகாயின் விலை மீண்டும் வெகுவாகச் சரிந்துள்ளது. ஏற்கனவே ஒரு மாதகாலமாக ருத்தல் 9 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த மிளகாய், தற்போது கிளிநொச்சிச் சந்தையில் ருத்தல் 7 ரூபா முதல் 7-25 சதம் வரை விற்பனவு செய்யப்பட்டு வருகிறது.

இதேபோல் வெங்காயமும் அந்தர் 90 ரூபா முதல் 100 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (அ)

# விடுதலைபெற்ற 18 இளைஞர்கள் மீண்டும் விளக்கமறியலில்!

## விசாரணையைப் பார்க்க மக்கள் திரண்டிருந்தனர்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரியில் துப்பாக்கி முனையில் பஸ்ஸில் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களான 18 தமிழ் இளைஞர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். ஆயினும் நீதிமன்ற துப்பாக்கிக் கொள்ளை தொடர்பாக இவர்கள் 18 பேரும் மீண்டும் ரிமாண்டில் வைக்கப்பட்டனர்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் பதில் நீதவான் எஸ். கே. திரவியநாயகம் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

### 40 தமிழ் இளைஞர்கள்

சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கி கொள்ளை தொடர்பாக கைதான 40 தமிழ் இளைஞர்களில் 18 பேர் பஸ் கொள்ளை தொடர்பாகவும் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

40 தமிழ் இளைஞர்களும் நேற்று பலத்த பாதுகாப்புடன் வான் ஒன்றில் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட போது, மக்கள் சந்தேக நபர்களை பார்ப்பதற்காக வானை முற்றுகையிட்டனர்.

பொலிஸாரும், சிறைச்சாலை ஊழியரும், மக்களை வானுக்கு கிட்டச் செல்லவிடாமல் தடுத்து, 40 பேரையும் நீதிமன்றத்திற்குள் அழைத்துச் சென்றனர். நீதிமன்ற கூண்டு ஏற்கனவே வேறு வழக்கு தொடர்பாக வந்த சந்தேக நபர்களினால் நிரம்பியிருந்ததால், 40 பேரும் பார்வையாளர் ஆசனத்திலிருந்தனர். நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும், ரோட்டிலும் பொதுமக்கள் ஏராளமானோர் கூடியிருந்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்), எஸ் லோகேஸ்வரன், சி. பரமசிவம்பிள்ளை, பி. பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆஜரானார்கள். பொலிஸ் தரப்பில் சாவகச்சேரி இன்ஸ்பெக்டர் தர்மராசா ஆஜரானார்.

### கோர்ட்டில் பரபரப்பு

பஸ்கொள்ளை தொடர்பாக 21 பெயர்களை கூப்பிட்ட போது 18 சந்தேக நபர்கள் மட்டும் வரிசையில் வந்து நின்றனர். மற்ற 3 சந்தேக நபர்களும் எங்கே? என்று நீதவான் கேட்டார். இதனை தொடர்ந்து நீதிமன்றத்தில் பரபரப்பு ஏற்பட்டது. பொலிஸாரும், சிறைச்சாலை ஊழியரும் உஷார் நிலையடைந்து 40 சந்தேக நபர்களையும் தனித்தனியாகபெயர்சொல்லி கணக்குப் பார்த்தபின், பஸ் கொள்ளை வழக்கில் 18 பேர் தான் என இன்ஸ்பெக்டர் கூறியபின் பரபரப்பு அடங்கியது.

### ஆட்சேபனை இல்லை

இவ்வழக்கில் தொடர்பாக, விசாரணை ஆரம்பமானதும், சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சந்தேக நபர்களை பிணையில் விடுவதற்கு பொலிஸ் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் உண்டா? என்று கேட்டபோது, இன்ஸ்பெக்டர் தர்மராசா பஸ் கொள்ளை வழக்கில். சந்தேக நபர்களை விடுதலை செய்வதானல் ஆட்சேபணையில்லையென்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நீதவான் சந்தேகநபர்களை அழைக்குமாறு நீதிமன்ற முதலியாரிடம் தெரிவித்தார்.

### 18 இளைஞர்கள்

வி. நாகலிங்கம், கே. சுரேந்திரன், வி. நடராசா, சி தனபாலசிங்கம், வி. ஐயாத்துரை, வி. ஞானசேகரம், எஸ். செல்லத்துரை, எஸ். தேவபாலன், ஏ. தியாகலிங்கம், பி. கருணாநிதி, த. கருணாகரன், வி. சுப்பிரமணியம், எம். சின்னராசா வி. ராஜலிங்கம், ந. சுப்பிரமணியம், அ. சத்தியம், க. தெய்வேந்திரன், பொ. மகேந்திரன். க. ராசேந்திரன், பொ. ஜெயராசா, ப பாலச்சந்திரன் ஆகிய 21 பெயர்களை அழைத்தபோது 18 பேர்கள் மட்டும் வரிசையாகவந்து நின்றார்கள்.

### '3 பேர்கள் எங்கே?'

மற்ற 3பேரும்எங்கே? என்று நீதவான் கேட்டார்.

சிறைச்சாலையிலிருந்து எத்தனைபேரை கொண்டுவந்தீர்கள்? என நீதவான் சிறைக் காவலாளியைக் கேட்டார்.

காவலாளி: 40 பேரை கொண்டு வந்தோம்.

நீதவான்: பெயர் கூப்பிடப்பட்ட 3 பேர் எங்கே? வரவில்லையா? ரிமாண்டில்இருக்கிறார்களா?

இன்ஸ்பெக்டர்: பஸ் கொள்ளைச் சம்பவத்தில் 18பேர்தான் சந்தேகநபர்கள்.

ஜி. ஜி. பொன்னம்பலம் பொலிஸார் கோர்ட்டில் நின்றவர்களையும், வந்தவர்களையும் சேர்த்திருக்கலாம் (கோர்ட்டில் சிரிப்பு)

பஸ் கொள்ளை வழக்கில் 18 பேர்தான் சந்தேகநபர்கள் என்று கூறப்பட்டதைத் தொடர்ந்து நீதவான் அவர்களை விடுதலைசெய்து உங்களை இந்த வழக்கில் விடுதலை செய்கிறேன். வேறு வழக்கில் எவரும் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் நிற்கவேண்டும் மற்றவர்கள் வீட்டுக்குப்போய் நல்லபடி இனிமேல் நடக்கவேண்டும் என நீதவான் கூறினார்.

விடுதலையான 18 சந்தேக நபர்களும், சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கி கொள்ளை வழக்கில் தொடர்புள்ளதாக கூறப்பட்டு, மீண்டும் ரிமாண்டில் வைக்கப்பட்டனர். (க)

## படகு கவிழ்ந்து 150 பேர் பலி

பம்பாய், அக். 2

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் வட இந்தியாவில் இருதினங்களில் மட்டும் அடுத்தடுத்து நிகழ்ந்த இரண்டு விபத்துக்களினால், 230 பேர் பலியானார்கள்.

நேற்று கல்கத்தாவுக்கு அருகே ஏற்பட்ட பஸ் விபத்தில் 88 பேர் உயிரிழந்தனர். இன்று பம்பாயிலிருந்து 500 மைல் தூரத்தில் ஹிந்து யாத்திரிகர்கள் சென்ற படகு ஒன்று நீரில் மூழ்கியதில் 150 பேர் மாண்டனர்! 50 பேர் மட்டுமே செல்லக்கூடிய இப்படகில் 150 பேர் சென்றிருந்தனராம்.

## நாளை அடிக்கல் நாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் நலனேக்புக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கிறது. கோண்டாவிலில் உள்ள சங்கத்தின் மின்தறி வளவில் அமையவிருக்கும் இக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ காலை 10 மணிக்கு நாட்டிவைப்பார்.

இரண்டு லட்சம் ரூபாவுக்கான இக்கட்டிடத்திற்கான செலவை இச்சங்கமே பொறுப்பேற்கும் என்பது குறிப்பிடத்தக்கது. [அ]

## எஸ். ஜே. வி.

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கருத்துவெளியிட்டார். இதனை நான் வன்மையாக எதிர்த்தேன். ஆனால் அவர் புறக்கணித்துவிட்டார்! "தமது மாபெரும் அரசியல் சூதாட்டம் இது" என்று வர்ணித்து, தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதையே திரு. பீலிக்ஸ் வற்புறுத்தினார்" என்று சாட்சியமளித்த திரு சில்வா மேலும் கூறியதாவது:

"48 தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்வதை முன்னாள் யாழ். மேயர் திரு. துரையப்பாவும் விரும்பினார். திருமதி சிறிமா பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் சென்றிருந்த போது, ஒரு கூட்டத்தில் வைத்து, தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி ஒரு மகஜரை திரு. அல்பிரட் துரையப்பா சமர்ப்பித்தார். இது குறித்து பரிசிலனை செய்வதாக அந்த இடத்திலேயே முன்னாள் பிரதமர் உறுதி அளித்திருந்தார். இந்த இளைஞர்களை விடுவிப்பதன் மூலம் சுதந்திரக் கட்சியை வடக்கே பலப்படுத்த விரும்பிய திரு அல்பிரட் துரையப்பா, பயங்கரவாதிகளின் துப்பாக்கி குண்டுகளுக்கு பலியாகிவிட்டார்.

"1971-க்கும் 1974-க்கும் இடைப்பட்ட காலத்தில் பயங்கர குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட இந்த 48 தமிழ் இளைஞர்கள்; நீதிபதி முன்னிலையிலேயே பல குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டிருந்தனர் அவசரகாலச் சட்டத்தின்கீழ் புதிய சட்டமொன்றைக்கொண்டு வந்து, இவர்கள் மீது வழக்குத் தொடர பொலிஸார் முயற்சிக்கையில்; பொலிஸாரின் ஆலோசனை சம்மதம் எதுவும் பெருமலேயே திரு. பீலிக்ஸின் உத்தரவுப்படி இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மாருக திரு. எஸ். ஜே. வி. அதிசப்படியான வாக்குகளால் அந்த இடைத்தேர்தலில் வெற்றிபெற்றிருந்தார்.

"இவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னர், வடக்கே இரத்தக்களறி ஏற்பட்டது. கொலை, கொலைமுயற்சிகள், கொள்ளைகள் தலைதூக்கின பதினொரு பொலிஸ் அதிகாரிகள் பயங்கரவாதிகளினால் கொலை செய்யப்பட்டனர். குறைந்திருந்த குற்றச் செயல்கள் வடக்கே மீண்டும் பயங்கர ரூபம் எடுத்தது" என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சில்வா கூறினார்.

## கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரி திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரியின் 150 கட்டில்கள் உள்ள உள்நோயாளர் மருத்துவ மனையை நேற்று ஆயுர்வேத ஆணையாளர் திரு. பி. வி. வெரகொட திறந்து வைப்பதற்கு முன்னதாக ஆஸ்பத்திரி வளவில் நடைபெற்ற மரம்நாட்டும் நிகழ்ச்சியிலும் பங்குபற்றினர்.

யாழ். ஆயுர்வேத ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் என். கந்தையா இத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

வட இலங்கை சித்த ஆயுர்வேத மருத்துவ சம்மேளனத் தலைவர் டாக்டர் றெ. சு. இன்னுசித்தம்பி, தங்கள் சம்மேளனத்தின் சார்பில் ஆணையாளரிடம் மருந்துப் பொதி ஒன்றைக் கையளித்தார்.

பெருந்தொகையான ஆயுர்வேத வைத்தியர்கள், இலாகா உயர் அதிகாரிகள், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. டி. தர்மபாலன் ஆகியோருட்பட அநேகர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

பதில் ஆயுர் வேத ஆணையாளர் திரு எல். சுகுணதாசவும் வருகை தந்திருந்தார். (கூ)

## 58-77 இனக் கலவரங்களின் பின்

## தமிழர் தென் இலங்கைக்கு ஏன் திரும்பிச் சென்றனர்?

(யாழ்ப்பாணம்)

1958-ம் ஆண்டு கலவரத்தின்போது வடக்கில் வந்த தமிழர்கள் 30 நாட்களில் மீண்டும் தெற்குச் சென்றார்கள். 1977ல் நடந்த கலவரத்தில் வடக்கு வந்த தமிழர்கள் 50 நாட்களில் மீண்டும் தெற்கு சென்றார்கள் வடக்கில் பொருளாதாரவளம் இல்லாததே இதற்குக் காரணமாகும்.

வரணியில் நடந்த தமிழ் காங்கிரஸ் கருத்தரங்கில் பேசிய தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கே. எஸ். கதிர்காமநாதன் தலைமையில் நடந்தஇக் கருத்தரங்கில் திரு. பொன்னம்பலம் பேசுகையில் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்ஈழத்தின் பொருளாதாரத்தில் முக்கிய கவனம் செலுத்தி வந்ததினால் தான், 3 பெரிய தொழிற்சாலைகளை அமைத்ததுடன் பல அபிவிருத்தித் திட்டங்களையும் செய்தது என்றார்.

தமிழ்ஈழம் பிரிந்தவுடன் பொருளாதார வளம் இல்லையானால் தமிழ்மக்கள் பட்டினியால் மடியநேரிடும் என்றும் நாம் பொருளாதாரவளத்தில் உடனடியாக கவனம்செலுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

திருவாளர்கள் க. சரவணமுத்து, ஈ. ஆனந்தராசா, ரீ. மகேந்திரராசா உட்பட மற்றும்பலர் பேசினார்கள். (க)

## சந்தேகநபர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சந்தேகநபரை அடையாளம் காட்டவில்லை.

19,150 ரூபா கொள்ளையடித்தது. 15,818 ரூபா காசோலை கொள்ளை, துப்பாக்கிமுனையில் 795 ரூபா கொள்ளை, 671 ரூபா கொள்ளை தொடர்பாக இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. (க)

## பொற்றொழிலாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 1400 பேருக்கு நாள் ஒன்றுக்கு 50 பேர்வீதம் பவுண் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கு 4 பவுண் வீதம் வழங்கப்படுகிறது. [க-அ]

## வேலை நிறுத்த...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தத்தில் தூண்டிவிட்டுதொழிற் சங்கத் தலைவர்கள் சுகம் அனுபவிக்கும் காலம் மலையேறிவிட்டது" என்றும் ஜனதிபதி கூறினார். [ம]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as a Newspaper in SriLanka.